பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சமச்சீர் கல்வித் திட்டம்!



39

# இடம் பொருள் கலைஞர்







# சமச்சீர் கல்வித் திட்டம்!

## தடைகள் தாண்டிய தரமான அறிவியக்கம்!

‘அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி!’ இப்படி ஓர் உன்னதமான முயற்சியை எந்தக் கட்சியும் நினைத்துக்கூட பார்த்திராத போது, திராவிட முன்னேற்றக் கழகம் மிகத் துணிச்சலாக அந்த இலக்கை 2006-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக அளித்தது.

நர்சரி, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ-இந்தியன், ஓரியண்டல், மாநில வாரியக் கல்வி ஆகிய பல்வேறு கல்வி முறைகளை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான சமச்சீர்க் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதுதான் ‘சமச்சீர் கல்வித் திட்ட’த்தின் முக்கிய நோக்கம்.

எல்லாவற்றிலும் சமத்துவம், அனைவருக்கும் சம உரிமை என்று பேசப்படும் இந்தக் காலகட்டத்தில் கல்வியிலும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தி.மு.க.வின் நிலை மட்டுமல்ல, தமிழ்நாட்டுக் கல்வியாளர்கள் பலரின் கருத்தும் அதுதான். அதனை எடுத்த எடுப்பிலேயே தான்தோன்றித்தனமாக அறிவித்துவிடவில்லை என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தத் திட்டம் கடந்து வந்த சோதனைகளும், தாண்டி வந்த தடைகளும் ஏராளம்.

### பலகட்ட பரிசீலனைகள், பரிந்துரைகள்

2006-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தவுடனேயே சமச்சீர் கல்வித் திட்டத்தைத் தனது முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றி அறிவித்துவிடவில்லை நமது கழகம். இந்தத் திட்டம் பற்றி அரசுக்குப் பரிந்துரைகளைத் தருவதற்காக 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் தலைமையில் கல்வியாளர்களைக் கொண்ட ஒரு குழுவினை அரசு அமைத்தது. அந்தக் குழு இதைப் பற்றி நன்கு ஆய்வு செய்து தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு 2007-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி அளித்தது.

அந்தப் பரிசீலனைகளை அரசு அப்படியே ஏற்றுக் கொண்டுவிடவில்லை. அந்தக் குழுவின் பரிந்துரைகளை மீண்டும் ஆய்வுசெய்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி எம்.பி.விஜயகுமார் அவர்களை ஒரு நபர் குழுவாக அரசு நியமித்தது. அதன்படி, அவரும் தனது ஆலோசனைகளை வழங்கினார்.

> அம்மையாரின் சர்வாதிகாரப் போக்குக் காரணமாக, 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் முதல் மூன்று மாதங்களைக் குழப்பத்திலேயே கழித்தார்கள்.

அதன் பிறகு, தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து பரிசீலிக்க, பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டங்கள், தேர்வு முறைகள் ஆகியவற்றைக் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க அதிகாரிகளையும் கல்வியாளர்களையும் கொண்ட குழு ஒன்று அரசால் 2008-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி அமைக்கப்பட்டது. அந்தக் குழு கர்நாடகா, குஜராத், கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கையை அளித்தது.

இவ்வாறு பலகட்ட பரிசீலனைகளை மேற்கொண்டு, சுமார் நான்கு ஆண்டுகள் கழித்து, 2010-ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வித் திட்டத்தை, தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக அதற்கான சட்டத்தை 2010-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி சட்டப் பேரவையில் கழக அரசு இயற்றியது.

### இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்துதல்

சட்டம் இயற்றப்பட்ட பிறகும், அன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில் 2010-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கல்வியாளர்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, சமச்சீர் கல்வித் திட்டத்தை 2010-2011 கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன.

அதன்படி, சமச்சீர் கல்வி முறையை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தலாம் என்றும், முதற்கட்டமாக 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் ஒன்றாம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புக்கும், பிறகு 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் இதர வகுப்புகளுக்கும் நடைமுறைப்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து, 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு பாடத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, பாடப் புத்தகங்கள் தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் அச்சிடப்பட்டு, மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அதுபோலவே, அரசின் கொள்கை முடிவின்படி, 2011-2012 ஆம் கல்வி ஆண்டு முதல் சமச்சீர் கல்வி முறையை எஞ்சிய 2, 3, 4, 5, 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்கள் 200 கோடி ரூபாய் செலவில் அச்சிடப்பட்டு, அனுப்பப்பட்டன. நம் கழக அரசு வெளியிட்ட சமச்சீர் கல்வி பாடநூல்கள்- மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் பாராட்டுகளைப் பெற்றன. இந்நிலையில், 2011-ஆம் ஆண்டு மே மாத மத்தியில், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

### சமச்சீர் கல்வியின் சட்டப் போராட்டங்கள்

கழகம் ஆட்சியில் இருந்தபோதே, சமச்சீர் கல்விச் சட்டத்தைத் தள்ளுபடி செய்யக் கோரி ஒரு சில தனியார் பள்ளிகள் மற்றும் சங்கத்தினரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகளின் மீது, 2010-ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், தமிழ்நாடு அரசு பிறப்பித்த சட்டம் செல்லும் என்று சொல்லப்பட்டது.

தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை வழங்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்நிலையில், இந்தத் திட்டம் குறித்து அ.தி.மு.க. அரசு திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அந்தச் சட்டத்தை ரத்து செய்ய உத்தரவிடப்பட்டது. மேலும் நீதிமன்றம் தனது தீர்ப்பில், “சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக் குழு விரிவாக ஆராய்ந்து சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது” என்று நம் கழகம் கொண்டு வந்த திட்டத்தை அங்கீகரித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் அ.தி.மு.க அரசு மேல் முறையீடு செய்தபோது, அந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்றும், சமச்சீர் கல்வி பாடத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பின், அதுகுறித்து ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும், அந்தக் குழுவின் அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறியது. தொடர்ந்து, அ.தி.மு.க. அரசு அமைத்த அந்த நிபுணர் குழுவில், சமச்சீர் கல்விக்கு எதிரானவர்களே இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற விமர்சனம் வந்தது. ஆனாலும், அந்தக் குழு தனது அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அதை விசாரித்த உயர்நீதிமன்றம், தனது தீர்ப்பில், “மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், சமச்சீர் கல்விச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவது, மாணவர்களின் நலனைப் பாதிக்கும். எனவே தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தம் செல்லாது. அதை ரத்து செய்கிறோம்” என்று கூறியது.

இவ்வாறு நீதிமன்றங்களின் கண்டிப்புக்குப் பிறகு, அ.தி.மு.க. அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்னது. ‘கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை’ என்ற கதையாக, சமச்சீர் கல்வி பாட நூல்களில் இடம் பெற்றிருந்த திருவள்ளுவர் படம் உட்படப் பல பகுதிகளை ஸ்டிக்கர் ஒட்டி மறைத்தும், கறுப்பு நிற மார்க்கர் பேனா கொண்டு அடித்தும் புத்தகங்களை வழங்கியது அம்மையாரின் அரசு. அம்மையாரின் சர்வாதிகாரப் போக்குக் காரணமாக, 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் முதல் மூன்று மாதங்களைக் குழப்பத்திலேயே கழித்தார்கள்.

கல்வியில் சமத்துவம் என்பது நீண்ட நெடிய போராட்டத்தைக் கொண்டது என்பதற்கு நிகழ்கால சாட்சி, சமச்சீர் கல்வித் திட்டம்.

...வலம் வருவோம்

## சஞ்சீவ் பட் உடன் நிற்கும் இந்தியா!

குஜராத்தில் 2002-ஆம் ஆண்டில் நடைபெற்ற மதக் கலவரத்தை அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. அந்தக் கலவரங்களின்போது மோடி-அமித்ஷா கூட்டணி அரங்கேற்றிய கொடூரங்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தவர் அப்போது காவல்துறை அதிகாரியாக இருந்த சஞ்சீவ் பட். அது தொடர்பாக, விசாரணை அமைப்புகளிலும் மக்கள் மன்றத்திலும் நீதிக்குக் குரல் கொடுத்து வந்தார்.

இந்த நிலையில், அவர்மீது பழிவாங்கும் நடவடிக்கையாக பழைய வழக்கு ஒன்றில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி பணி நீக்கம் செய்ததுடன், போதைப் பொருள் வழக்கு ஒன்றிலும் கைது செய்யப்பட்டு 2018-ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது முதல் அவருக்குப் பிணை மறுக்கப்பட்டு வரும் நிலையில், சமீபத்தில் உச்சநீதிமன்றம் அவரது பிணை மனுக்களுக்கு 3 லட்ச ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

நீதிக்காகப் போராடும் அவரது மனைவி, ‘X’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு பலராலும் பகிரப்பட்டு வருகிறது. அபராதத் தொகையை நாங்கள் செலுத்துகிறோம் என அவரது வங்கிக் கணக்குக்குப் பலரும் தொகை அனுப்புகின்றனர். நீதிக்காக என்றும் இந்தியா துணை நிற்கும்.

## ::ப்ளாஷ்பேக்



### அண்ணாவுடன் பிரச்சாரம்!

என் தாத்தா அல்ஹாஜ் எம்.மேத்தா அவர்கள் கழகம் தொடங்கப்பட்ட நாள் முதலே பேரறிஞர் அண்ணாவின் நன்மதிப்பைப் பெற்று கழகப் பணியாற்றி வந்தார். 1962-ஆம் ஆண்டு கொடைக்கானலுக்குத் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள வருகை தந்த அண்ணாவுடன் என் தாத்தாவும் இணைந்து பிரச்சாரம் மேற்கொண்டார். அப்படியான தருணத்தில் இந்தப் படம் எடுக்கப்பட்டது. பின்னாட்களில் தாத்தா சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படவும் இந்தச் சந்திப்பு காரணமாக அமைந்தது. நாங்கள் பாதுகாத்து வைத்திருக்கும் அரிய படம் இது.



முகமது நயினார்

**-ஏ.முகமது நயினார், புகைப்படக் கலைஞர், பெரியகுளம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மாணவர்களின் பங்களிப்பு!

**1957-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்க ஆயத்தமாவதற்கு முன், மாணவர் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. “மாணவத் தோழர்கள் தங்கள் பணி என்ன எனக் கேட்டார்கள். நாட்டு மக்களுக்கு என்ன என்ன தேவை என்பதை எண்ணிப் பார்த்து, ஆராய்ந்து தலைமைக் கழகத்துக்கு அறிவிக்க வேண்டும். பல முற்போக்குக் கட்சிகளின் தேர்தல் திட்டங்களை அலசிப் பார்த்து, கழகம், இந்த நாட்டுக்கு உகந்த வகையில் எத்தகைய தேர்தல் திட்டத்தை வைக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 267




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131